பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்திருந்தால் அந்த வாரியத்தின்மூலம் விபத்தின் தன்மைக்கு ஏற்ப உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளிக்குக் காப்பீட்டுத் திட்டம் வழங்குவோம் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி கூறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

அவசர ஊர்தி

***1118—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கெனத் தனியாக 108 அவசர ஊர்தி வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

108 அவசர கால ஊர்திகளைப் பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டங்களினுடைய அவசரத் தன்மை, பிரசவ காலத் தேவைகள், சாலை வசதி, சென்றடைய வேண்டிய தூரம் மற்றும் அதற்கான நேரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது 14 அவசரகால ஊர்திகள் செயல்படுகின்றன. பட்டுக்கோட்டையில் உள்ள 108 அவசரகால

2012 மார்ச் 30]

ஊர்தி அதனைச் சுற்றியுள்ள 20 கிலோ மீட்டர் சுற்றளவில் ஏற்படும் அனைத்து அவசரகாலத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சராசரியாக 20 நிமிடங்களுக்குள் அவசரகாலத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள, பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி, பட்டுக்கோட்டையிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஆகவே, பட்டுக்கோட்டையில் நிறுத்தப்பட்டுள்ள 108 அவசரகால ஊர்தியின்மூலமாக அப்பகுதி மக்களுக்குத் தற்போது சேவை தாமதமின்றி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பட்டுக்கோட்டை நகரிலிருந்தும், மதுக்கூர் பேரூராட்சியிலிருந்தும் இரண்டு வாகனங்கள், 108 ஆம்புலன்ஸ்கள் இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிராம்பட்டினத்தைப் பொறுத்தவரையிலே, அந்தப் பகுதி 30 ஆயிரம் ஜனத்தொகை இருக்கக்கூடிய ஒரு பகுதி. இரண்டாவதாக, மீனவர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி. மேலும், கிழக்குக் கடற்கரை சாலையிலிருந்து அதிகமான வாகனங்கள் மிக வேகமாகச் செல்லக்கூடிய ஒரு பகுதியாக அதிராம்பட்டினம் அமைந்திருக்கின்றது. இதைச் சுற்றி 20 குக்கிராமங்களும் அமைந்திருக்கின்றன. அதிராம்பட்டினம் பகுதியிலே தீ விபத்துகள் சகஜமாக நடந்துகொண்டிருக்கின்றன. ஏனென்று சொன்னால், இப்போது அங்கு குடிசைப் பகுதிகள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே வருடத்திற்கு 3 அல்லது 4 தீ விபத்துகள் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோன்று கிழக்குக் கடற்கரைச் சாலையிலே கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளிலே அதிக வேகமாக வாகனங்கள் வரக்கூடிய காரணத்தினாலே அதிகமான விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையிலும் இரவு நேரங்களில் மருத்துவர்கள் 'Doctor on call' என்ற முறையில்தான் இருக்கின்றார்கள். இரவு நேரத்தில் அப்பகுதியில் கூப்பிட்டால் அவர்கள் வந்து சிகிச்சை கொடுக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கக்கூடிய காரணத்தினாலே, மேலும் ஒரு வாகனத்தை,

[2012 மார்ச் 30

ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய வாகனங்கள் இயங்கிக்கொண்டிருந்தாலுங்கூட, இரண்டு வாகனங்கள் engaged ஆக இருக்கும்பொழுது, மூன்றாவதாக அவர்கள் கேட்கும்பொழுது, அவர்களால் வாகனம் கொடுக்க இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ரெங்கராஜன், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *எனவே, மூன்றாவதாக அதிராம்பட்டினத்திற்கு மிக அவசியமான 108 ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றைக் கொடுக்க வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 108 அவசரகால ஊர்திகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே 200 புதிய ஊர்திகளை வாங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இவற்றைப் பகிர்ந்தளிக்கும்போது, அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கான தேவையினையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருத்தில் கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

திருக்கோயில் புனரமைப்பு

***5062—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—